# விவிலியப் பணிக்குழு செய்திகள்

**29.09.2024** விவிலிய மாதத்தை முன்னிட்டு ‘‘மாபெரும் விவிலிய வினா–விடை போட்டி **2024**’’ சென்னை–மயிலை உயர்மறைமாவட்டத்தைச் சார்ந்த பங்குமக்களுக்கு **29.09.2024** அன்று புனித இரபேல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. சாந்தோம் பேராலய அதிபர் மற்றும் பங்குதந்தை அருள்தந்தை வின்செென்ட் சின்னதுரை அவர்கள் வினா–விடை போட்டியினை சிறப்புரை வழங்கி ஜெபித்து தொடங்கி வைத்தார். **செக்கரியா, ஓசேயா, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் எபேசியர் ஆகிய நூல்களிலிருந்து 175** கேள்விகள் படித்து தயாரிக்கும்படி முன்கூட்டியே கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட 175 கேள்விகளிலிருந்து 100 கேள்விகள் தேர்வுக்கு கொடுக்கப்பட்டது. 703 நபர்கள் தேர்வில் பங்குகொண்டார்கள். இவ்வாண்டு திருவள்ளூர் மற்றும் சாந்தோம் ஆகிய இரண்டு மையங்களில் நடைபெற்ற வினா–விடை போட்டிக்கு பதிவுச் செய்தவர்கள் மொத்தம் 946 நபர்கள். தேர்வில் பங்குகொண்டவர்கள் மொத்தம் (169+703) 872 நபர்கள். இவர்களைக் ஊக்கப்படுத்திய அனைத்து அருள்தந்தையர்களுக்கும் விவிலியப் பணிக்குழுவின் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். சிறப்பாக போட்டிக்குத் தேவையான இடமளித்து அனைத்து வகையிலும் உதவிப் புரிந்த புனித இரபேல் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் அருள்சகோதரி. ராணி கிளமண்டு அவர்களுக்கும் பள்ளி பணியாளர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள். மேலும் மேற்பார்வையாளர்களாக இருந்து உதவிபுரிந்த கீழச்சேரி, புனித தோமையார் கல்லூரி அருள்சகோதரர்களுக்கும் எமது விவிலியப் பணிக்குழுவின் தன்னார்வ பணியாளர்களுக்கும் உயர்மறைமாவட்டத்தின் அலுவலகப்பணியாளர்கள் அனைவருக்கும் விவிலியப் பணிக்குழுவின் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

**13.10.2024** அன்று **“360 நாட்களில் விவிலியம் வாசிப்போம் 2024”** இணைந்து விவிலியம் வாசிப்பவர்களுக்கான எட்டாவது தேர்வு நடைபெற்றது. இதில் தமிழகத்தின் அனைத்து மறைமாவட்டங்களிலிருந்தும் வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் 762 நபர்கள் கூகுள் படிவத்தின் வழியாக தேர்வில் பங்கேற்றனர். 308 நபர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றார்கள். சென்னை–மயிலை உயர்மறைமாவட்டத்திலிருந்து மட்டும் 85 பங்குகளிலிருந்து 308 நபர்கள் தேர்வில் பங்கேற்றார்கள். 48 பங்குகளைச் சார்ந்த 104 நபர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றார்கள். இவர்களுக்கு 10.11.2024 அன்று 9வது தேர்வு நடைபெறவுள்ளது.

13.10.2024 அன்று **“Read Bible in 2024”** இணைந்து ஆங்கிலத்தில் ESV-CE (English Standard Version-Catholic Edition) திருவிவிலியத்தை முழுமையாக வாசிப்பவர்களுக்கான ஏழாம் மாதத் தேர்வு கூகுள் படிவத்தின் வழியாக நடைபெற்றது. இதில் 82 நபர்கள் தேர்வில் பங்கேற்றார்கள். இவர்களுக்கு 10.11.2024 அன்று 9வது தேர்வு நடைபெறவுள்ளது.

13.10.2024 அன்று பொதுநிலையினருக்கான ஓர் ஆண்டு சான்றிதழ் விவிலியப் பட்டயப் பயிற்சியின் (2024–2025) நான்காம் மாதத்திற்கான வகுப்பு காலை 9.30 மணி முதல் மாலை

4.30 மணி வரை நடைபெற்றது. விவிலியப் பேராசிரியர் அருள்தந்தை ரெய்மண்ட் ஜோசப் அவர்கள் "ஐந்நூல்களுக்கு" விளக்கமளித்தார்கள். அதனைத் தொடர்ந்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் 93 நபர்கள் பங்குபெற்றார்கள். அன்று மாலை விவிலியப் பணிக்குழுவின் தன்னார்வப் பணியாளர்களுக்கான மாதாந்திரக் கூட்டமும் நடைபெற்றது.

**விவிலிய ஞாயிறு சிறப்புத் திருப்பலி சிறப்பிக்கப்பட்ட இடங்கள்**

29.09.2024 – ஆரோக்கிய அன்னை & திருத்தூதர் தோமையார் திருத்தலம், சின்னமலை

06.10.2024 – அடைக்கல அன்னை ஆலயம், ஊத்துக்கோட்டை

20.10.2024 – உயிர்த்த ஆண்டவர் ஆலயம், பெரவள்ளூர்

**விவிலியக் கண்காட்சி நடைபெற்ற இடங்கள்**

06.10.2024 – தணிகை மாத ஆலயம், திருத்தணி

13.10.2024 – பெரிய நாயகி அன்னை ஆலயம், பெரியபாளையம்

20.10.2024 – உயிர்த்த ஆண்டவர் ஆலயம், பெரவள்ளூர்

27.10.2024 – அடைக்கல அன்னை ஆலயம், ஊத்துக்கோட்டை

27.10.2024 – திருஇருதய ஆண்டவர் ஆலயம், கீழச்சேரி

செப்டம்பர் விவிலிய மாதம்/வாரம்/ஞாயிறை பல விதங்களில் போட்டிகள், கண்காட்சிகள், சிறப்பு விவிலிய பவனிகள் என்று பல விதங்களில் சிறப்பித்த அனைத்து பங்குதந்தையர்களுக்கும் விவிலியப் பணிக்குழுவின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

**செயலர்**

**அருள்பணி. எட்வர்ட் அந்தோணி ராஜி**